# போதைப் பொருள் விழிப்புணர்வு: பள்ளியில் உலக சாதனை நிகழ்ச்சி



போதைப் பொருள் விழிப்புணர்வுக்கான உலக சாதனை நிகழ்வை தொடங்கிவைத்து உறுதிமொழியேற்ற ஆட்சியர் க.இளம்பகவத், காவல் ஆணையர் ஏ.ஜி.பாபு.

**சேலம், நவ. 4:** சேலம் ஹோலி கிராஸ் குழும பள்ளி சார்பில், போதைப் பொருள் விழிப்புணர்வுக்காக மனித வடிவில் 3,015 பேர் பங்கேற்ற உலக சாதனை நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது.

சேலம் ஹோலி கிராஸ் பள்ளி மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியை ஆட்சியர் க.இளம்பகவத், மாநகர காவல் ஆணையர் ஏ.ஜி. பாபு ஆகியோர் பங்கேற்று தொடங்கிவைத்தனர்.

இந்நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள், பள்ளி பணியாளர்கள் மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழுவினர் என மொத்தம் 3,015 பேர் ஒருங்கிணைந்து பங்கேற்றனர். இந்த விழிப்புணர்வுக்கான மனித வடிவிலான முயற்சியை ஆசியா புக் ஆப் ரெக்கார்ட்ஸ் அமைப்பின் மதிப்பீடு மற்றும் சரிபார்ப்பு குழுவினர் உலக சாதனையாக அங்கீகரித்தனர்.

முன்னதாக, போதைப் பொருளின் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. தொடர்ந்து, போதைப் பொருள் எதிர்ப்பு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட சுகாதாரத் துறை இணை இயக்குநர் நந்தினி, மாவட்ட சுகாதார அலுவலர் சௌண்டம்மாள், நோட்டரி டேம் ஆப் ஹோலி கிராஸ் சிபிஎஸ்இ பள்ளியின் முதல்வர் சேசுராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# கால்நடை துறையில் உதவியாளர், ஆய்வாளர் காலிப் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும்

## அமைச்சர் கமலி தகவல்



சேலம் கால்நடை பன்முக மருத்துவமனையில் கால்நடைகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகளை ஆய்வுசெய்த அமைச்சர் செ.கமலி.

**சேலம், நவ. 4:** கால்நடை துறையில் உதவியாளர், ஆய்வாளர் காலிப் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என கால்நடை துறை அமைச்சர் கமலி கூறினார்.

சேலம் மாவட்டத்தில் மல்லூர், பனமரத்துப்பட்டி, சீலநாயக்கன்பட்டி உள்ளிட்ட இடங்களில் உள்ள கால்நடை மருத்துவமனைகளை தமிழக கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கமலி புதன்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, சேலம் கால்நடை பன்முக மருத்துவமனையில் அங்கு கால்நடைகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை விவரங்கள், கால்நடைகள் மற்றும் செல்லப் பிராணிகளுக்கு எடுக்கப்படும் ஸ்கேன் மற்றும் எக்ஸ்ரே கருவிகளின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுசெய்தார்.

மேலும், கால்நடை நோய் புலனாய்வு பிரிவு அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டு, தடுப்பூசி மருந்துகள் வைக்கப்படும் வாக் இன் கூலர் மற்றும் ஆய்வகம் ஆகியவற்றை பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்து கால்நடை மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, அமைச்சர் செய்தியாளர்களிடம் கூறுகையில், சேலம் மாவட்டத்தில் உள்ள கால்நடை மருத்துவமனை மருந்தகங்களில் ஆய்வு மேற்கொண்டோம். அங்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து பொதுமக்களிடம் கேட்டறிந்து வருகிறோம். குறைகள் இருந்தால் உடனடியாக சரி செய்யப்படும். ஏதாவது ஓர் இடத்தில் கால்நடைகள் உயிரிழந்தாலும் பரிசோதனை செய்து, எதனால் இறந்தது என கண்டறிந்து வருகிறோம். தமிழகத்தில் பரவலாக எந்த பாதிப்பும் இல்லை.

கால்நடை உதவியாளர், ஆய்வாளர் காலிப் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும். சேலம் தலைவாசலில் உள்ள கால்நடை பூங்கா செயல்பாட்டில் உள்ளது. அங்கு வேறு ஏதேனும் கூடுதல் வசதிகள் தேவைப்படும்போது தேவைகள் பூர்த்தி செய்யப்படும். நாமக்கல் மாவட்டத்தில் பறவைக் காய்ச்சல் பாதிப்பு ஏதுமில்லை என்றார்.

இந்த ஆய்வின்போது, சேலம் வடக்கு சட்டப் பேரவை உறுப்பினர் கா.சிவகுமார், கோட்டாட்சியர் கே.உதயகுமார், மண்டல இணை இயக்குநர் முருகன், துணை இயக்குநர் செல்வகுமார், உதவி இயக்குநர்கள் பாலமுருகன், நவநீதன், லதா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# சூரமங்கலம், அஸ்தம்பட்டி மண்டலத்தில் வளர்ச்சிப் பணிகள்: ஆணையர் ஆய்வு

**சேலம், நவ. 4:** சேலம் சூரமங்கலம், அஸ்தம்பட்டி மண்டலத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளை ஆணையர் லலித் ஆதித்ய நீலம் புதன்கிழமை நேரில் ஆய்வுசெய்தார்.

அஸ்தம்பட்டி மண்டலம் கோட்டம் எண் 16-இல் கழிவுநீர் ஓடை, கோட்டம் எண் 17-இல் மெய்யனூர் ராம் நகர், சத்ய நாராயணன் தெரு, அர்த்தனாரி தெரு, சின்ன திருப்பதி பிரதான சாலை ஆகிய இடங்களில் கழிவுநீர் கால்வாய் மேம்படுத்துவது மற்றும் தூர்வாரும் இடங்களை ஆய்வு செய்தார்.

மெய்யனூர் ராம் நகரில் தூய்மைப் பணியாளர்கள் மூலம் கழிவுநீர் கால்வாய் தூர்வாரும் பணியை பார்வையிட்ட அவர், ராம்நகர் தெருவில் கால்வாயில் கழிவுநீர் வெளியேறாமல் தேங்கியதை ஆய்வுசெய்து, அதை உடனடியாக சரி செய்யுமாறு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, சத்யநாராயண தெருவில் புதைசாக்கடையில் இருந்து கழிவுநீர் வெளியேறுவதைக் கண்டறிந்து, அவற்றை உடனடியாக சரி செய்ய பொறியாளருக்கு அறிவுறுத்தினார். அர்த்தனாரி தெருவில் கழிவுநீர் கால்வாயில் சிறு பாலம் அமைப்பது தொடர்பாக ஆய்வு செய்தார்.

சின்ன திருப்பதி பிரதான சாலை மற்றும் கோரிமேடு கலை, அறிவியல் கல்லூரி அருகில் உணவு கடைகள் அமைப்பதற்கான இடத்தைப் பார்வையிட்டார்.

தொடர்ந்து, ராம்நகர், ஆடிட்டர் காலனி, ஐயர் லைன், ஏரிக்கரை சாலை, வீரபாண்டியார் நகர், ஓமலூர் பிரதான சாலை 1, 2 அர்த்தனாரி தெரு 1, 2 மணிவண்ணன் தெரு ஆகிய பகுதிகளில் 4 வகையான குப்பைகளை தரம்பிரித்து பொதுமக்களிடம் இருந்து பணியாளர்கள் சேகரிப்பதை பார்வையிட்டார்.

# விவசாயி விட்டுச்சென்ற பணத்தை மீட்டு ஒப்படைத்த அலுவலருக்கு பாராட்டு

**சங்ககிரி, நவ. 4:** சங்ககிரி தோட்டக்கலைத் துறை அலுவலகத்தில் விவசாயி மறந்து விட்டுச்சென்ற பணத்தை மீட்டு ஒப்படைத்த உதவி தோட்டக்கலை அலுவலரை அரசு உயரதிகாரிகள், விவசாயிகள் பாராட்டினர்.

சங்ககிரி, சின்னாகவுண்டனூர், மோரூர் பிட் 1, சன்னியாசிப்பட்டி அக்ரஹாரம் கிராமங்களைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் நிவாரணம் பெறுவதற்காக தோட்டக்கலைத் துறை அலுவலகத்தில் சனிக்கிழமை மனு அளிக்க வந்தனர்.

ஞாயிற்றுக்கிழமை விடுமுறையை அடுத்து வழக்கம்போல திங்கள்கிழமை பணிக்கு வந்த அலுவலர்கள் அவரவர் பணிகளை மேற்கொண்டனர். அப்போது, தோட்டக்கலை உதவி அலுவலர் திருப்பதி தனது இருக்கைக்கு அருகே மஞ்சள் பையில் சில ஆவணங்கள், புகைப்படங்கள், ரொக்கம் ரூ.50 ஆயிரம் இருந்ததைக் கண்டார். பையில் இருந்த புகைப்படத்தைக் கொண்டு சனிக்கிழமை மனு அளிக்க வந்த விவசாயிகளின் விவரங்களை ஆய்வு செய்தார். அதில், பையை விட்டுச்சென்றது மோரூர் மேற்கு கிராமம் சக்திவேல் என தெரியவந்தது.

இதுகுறித்து அவர் தெரிவித்ததன் பேரில், விவசாயி கோட்டாட்சியரிடம் பையை பெற்றுச்சென்றார். விவசாயி விட்டுச்சென்ற பணத்தை மீட்டு ஒப்படைத்த உதவி தோட்டக்கலை அலுவலர் மா.திருப்பதியை கோட்டாட்சியர், உதவி இயக்குநர், சக அலுவலர்கள், விவசாயிகள் பாராட்டினர்.


केनरा बैंक Canara Bank — சிண்டிகேட் Syndicate

**தேவனாங்குறிச்சி கிளை**
#5/544F, KSP காம்பளக்ஸ், முதல் தளம், அனங்கூர் மெயின் ரோடு, தேவனாங்குறிச்சி, நாமக்கல் - 637209

**தங்க நகை பொது அறிவிப்பு**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள நபர், தங்களது கடன் கணக்குகளில் நிலுவையில் உள்ள தொகையை பலமுறை அறிவிப்பு வழங்கப்பட்ட பின்னரும் செலுத்தத் தவறியுள்ளார் என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. எனவே, அவர்கள் நிலுவைத் தொகையையும் அதனுடன் தொடர்புடைய பிற கட்டணங்களையும் செலுத்தி, அடமானமாக ஒப்படைக்கப்பட்டுள்ள பிணையப் பொருட்களை 21.12.2026 அன்று அல்லது அதற்கு முன்பாக மீட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தவறினால், வங்கியின் முழு விருப்பத் தீர்மானத்தின் அடிப்படையில், மேலும் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி, கடனாளரின் செலவில், வங்கியின் நடைமுறைகளின்படி, மேற்கண்ட பிணையப் பொருட்கள் பொது ஏலத்தின் மூலம் விற்கப்படும்.

| வ. எண். | கடன் தேதி | கணக்கு எண். | கடன்தாரரின் பெயர் & முகவரி | கடன் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | 18-07-2025 | 164086136980 | நந்தினி, க/பெ. செந்தில்குமார், 5 175, கந்தசாமி நகர், தேவனாங்குறிச்சி, திருச்செங்கோடு, நாமக்கல் - 637209. | 26,343.26/- |

நாள் : 04-11-2026
இடம் : தேவனாங்குறிச்சி
மேலாளர்



கனரா வங்கி Canara Bank (அரசுடைமையாக்கப்பட்ட வங்கி)

**ARM கிளை - திருச்சி**
முதல் தளம், முத்தய்யா டவர்ஸ், வில்லியம்ஸ் ரோடு, திருச்சி-620001.
Ph : 0431-2416067

**மின் ஏல விற்பனை அறிவிப்பு (அசையா சொத்துகளுக்கானது)**

2002ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், பத்திரப்படுத்துதல், நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச்சட்டம் விதிகள் 8 (6) & (9) விதிகளின் கீழ் விற்பனை அறிவிப்பு (E-Auction Sale Notice)

கடனாளருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்படுவது யாதெனில் கடனாளர்கள் M/s. First Mage, உரிமையாளர் : திருமதி.J.சிவசங்கரி, கதவு எண்.2/319-3, குளத்துகாடு, மின் அலுவலகம் எதிரில், சேலம் மெயின் ரோடு, குமாரபாளையம், நாமக்கல், தமிழ்நாடு - 638183. திருமதி.V.சிவசங்கரி, க/பெ. திரு.J.வேல்முருகன், கதவு எண்.4-94/11, V.I.P. நகர், குமாரபாளையம் அமானி கிராமம், கல்லாங்காட்டுவலசு அஞ்சல், தட்டாங்குட்டை பஞ்சாயத்து, குமாரபாளையம், நாமக்கல், தமிழ்நாடு-638183. திரு.J.வேல்முருகன், த/பெ. திரு.ஜெயக்கொடி, கதவு எண்.4-94/11, V.I.P. நகர், குமாரபாளையம் அமானி கிராமம், கல்லாங்காட்டுவலசு அஞ்சல், தட்டாங்குட்டை பஞ்சாயத்து, குமாரபாளையம், நாமக்கல், தமிழ்நாடு - 638183 ஆகியோர் திருச்சி ARM கிளைக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை 01.11.2026-ன் படி ரூ.1,37,81,703/- (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து ஏழு இலட்சத்து எண்பத்தொராயிரத்து எழுநூற்று மூன்று மட்டும்) + பின்வட்டி மற்றும் இதர செலவுகளுடன் திரும்ப பெறுவதற்காக கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்தினை கனரா வங்கி, திருச்சி ARM கிளையின் அதிகாரம் பெற்ற அதிகாரி கையகப்படுத்தி சுவாதீனம் பெற்று "எங்கு அமைந்துள்ளதோ அங்கு உள்ளது உள்ளபடி நிலையில்" பொது ஏல விதி மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு 25.11.2026 அன்று விற்பனை செய்ய முடிவு செய்துள்ளார்.

நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ.1,25,00,000/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்து ஐந்து இலட்சம் மட்டும்) ஏல முன்வைப்புத் தொகை ரூ.12,50,000/- (ரூபாய் பனிரெண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) 24.11.2026 அன்று மாலை நான்கு மணிக்கு முன்னதாக ஏலமுன்வைப்புத் தொகையை செலுத்த வேண்டும்.

**சொத்துகளின் விபரம் :** இச்சொத்தின் நிலம் மற்றும் கமர்சியல் கட்டிடமானது நாமக்கல் பதிவு மாவட்டம், குமாரபாளையம் துணை பதிவு மாவட்டம், சங்ககிரி தாலுக்கா, கத்தேரி பஞ்சாயத்து எல்லை, கத்தேரி கிராமம், உள்ளடங்கிய ரீ சர்வே எண்.304/11B1A மற்றும் 304/2B1, தொடர்பான புதிய பட்டா எண்.5242 மற்றும் 5703, மனை எண்.6, 7, 8 மற்றும் 9-ல் அமைந்துள்ளது. மொத்தப்பரப்பளவு 6987.50 ச.அடி இதற்குண்டான எல்லைகள் : அரிட்டம் நெ.1 : ரீசர்வே எண்.304/2B1 மற்றும் 304/11B1A - பட்டா எண்.5242 மற்றும் 5703 - பரப்பளவு 6987½ ச.அடி வடக்கே ரீசர்வே எண்.304/2A மற்றும் 304/11A தெற்கே 10 மீட்டர் அகல லேஅவுட் ரோடு, கிழக்கே மனை எண்.5, மேற்கே 9 மீட்டர் அகல லேஅவுட் ரோடு அளவுகள் கிழமேல் 140 அடி (வடக்கே) கிழமேல் 140 அடி (தெற்கே) தென்வடல் 50 அடி (கிழக்கே) தென்வடல் 50 அடி (மேற்கே) பரப்பளவு 6987½ ச.அடி (7000 - 12½ ஸ்ப்ளே கார்னர் = 6987½ ச.அடி) இதனுடன் அனைத்து உரிமைகளும் சேர்ந்தது. இச்சொத்து திரு.J.வேல்முருகன் மற்றும் திருமதி.V.சிவசங்கரி பெயரில் உள்ளது.

**ஏலத்திற்கான தேதி & நேரம் : 25-11-2026 & மதியம் 12.30 மணி முதல் 1.30 மணி**
(5 நிமிட நிபந்தனையற்ற நேர நீட்டிப்புடன் விற்பனை முடியும் வரை)

**ஏல முன்வைப்புத் தொகையை 24-11-2026 அன்று மாலை 4.00 மணிக்குள் செலுத்த வேண்டும்**

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை பார்வையிடுவதற்கான தேதி மற்றும் நேரம் : அலுவலக நாட்களில் காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணிக்குள் அதிகாரம் பெற்ற அதிகாரியின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம்.

இணையதள மின் ஏல விற்பனைக்கான விதிகள் & நிபந்தனைகளை அறிந்து கொள்ள, கனரா வங்கியின் www.canarabank.com என்ற இணையதளத்திலோ அல்லது அலுவலக நாட்கள் மற்றும் அலுவலக நேரத்திற்குள்ளாக தொடர்பு கொள்ளலாம்.

இடம் : திருச்சி
நாள் : 02-11-2026
**Portal of E-Auction : https://baanknet.com**
அங்கீகாரம் பெற்ற அதிகாரி, கனரா வங்கி



**HDB FINANCIAL SERVICES**

**HDB ஃபைனான்ஸியல் சர்வீசஸ் லிமிடெட்**
பதிவு அலுவலகம் : ராதிகா, 2 வது தளம், லா கார்டன் சாலை, நவ்ரங்புரா, அஹமதாபாத் – 09 கிளை அலுவலகம் : எண். 3, திவ்யா ட்ரேட் சென்டர், இரண்டாவது தளம், பிருந்தாவன் சாலை, சேலம் – 636 016

**மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு**

(கடன்தாரர் / கூட்டு – கடன்தாரர் / பொது மக்களுக்கு) (சர்ஃபாசி சட்டம் 2002 ன் விதி 8(6) – உடன் படிக்க – விதி 9(1) ன் கீழ்)

இதன் கீழ்க்கையொப்பமிட்ட HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் – ன் அதிகாரப்பூர்வ அலுவலர், பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைக்காப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 ன் கீழ் இதன் கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன் கணக்குக்காக பின்வரும் சொத்தை "இருக்கின்ற இடத்தில்" & "இருக்கின்ற நிலையில்" என்ற அடிப்படையில் விற்கும் உரிமையுடன் சுவாதீனம் எடுத்துள்ளார்.

**விண்ணப்பதாரர் & கூட்டு விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி – 1) ராஜா டெக்ஸ்,** க எண். 148, பத்மநாபன் தெரு, S பாப்பாரபட்டி (அஞ்சல்) ஆட்டையாம்பட்டி – 637 501 தமிழ்நாடு **மேலும் :** பழைய கதவு எண். 1/287, புதிய கதவு எண். 7/2, சர்வே எண். 3/9, வார்டு 7, பட்டா எண். 330, பரஞ்சோதியார் வீதி, கைலாசம்பாளையம்புதூர், S பாப்பாரபட்டி கிராமம், ஆட்டையாம்பட்டி – 637501, **2) ப்ரேமலதா தனபால்,** க எண். 12/37, மேட்டுப்பட்டி வீதி, ஆட்டையாம்பட்டி, சேலம், ஆட்டையாம்பட்டி, சேலம், ஆட்டையாம்பட்டி – 637501 தமிழ்நாடு **3) சௌந்தரராஜன் ராஜமாணிக்கம்,** க எண். 1/287, பரஞ்சோதியார் வீதி, ஆட்டையாம்பட்டி (வழி), S பாப்பாரபட்டி கிராமம், ஆட்டையாம்பட்டி – 637501, **4) தண்டாயுதபாணி R,** கதவு எண்.1/287, பரஞ்சோதியார் வீதி, ஆட்டையாம்பட்டி (வழி), பாப்பாரபட்டி, சேலம், ஆட்டையாம்பட்டி – 637501, தமிழ்நாடு **5) கனகாம்பாள் ராஜமாணிக்கம்,** 1/287, பரஞ்சோதியார் வீதி, ஆட்டையாம்பட்டி (வழி), S பாப்பாரபட்டி அஞ்சல், சேலம், ஆட்டையாம்பட்டி – 637501, தமிழ்நாடு **6) மேகலா செல்வம்,** 1/287, பரஞ்சோதியார் வீதி, ஆட்டையாம்பட்டி (வழி), S பாப்பாரபட்டி அஞ்சல், பாப்பாரபட்டி, சேலம், ஆட்டையாம்பட்டி – 637501 தமிழ்நாடு **கடன் கணக்கு எண் – 59059397 மொத்த நிலுவைத்தொகை** – 18.08.2026 ம் தேதியின் படி, ரூ. 68,95,568.67/– (ரூபாய். அறுபத்து எட்டு இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து ஐனூற்று அறுபத்து எட்டு மற்றும் பைசா அறுபத்து ஏழு மட்டும்) மற்றும் முழு தொகையையும் செலுத்தும் வரை மேற்கொண்டு வரும் வட்டி / நிகழ் செலவுகள் / செலவுகள் ஆகியன.

ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு தெரிந்த (ஏதேனும் இருப்பின்) வில்லங்கங்களின் விபரங்கள் – இல்லை

**அசையா சொத்துக்களின் விபரங்கள் I –** சேலம் மாவட்டம், நாமக்கல் பதிவு மாவட்டம், மல்லசமுத்திரம் சார் பதிவு அலுவலகம், சேலம் தெற்கு தாலுக்கா, S பாப்பாரபட்டி கிராமம், சர்வே எண். 3/9 ல் அமையப்பெற்ற புஞ்சை ஹெக் 0.21.0 க்கு தீர்வை ரூ. 1.62/– ஏக்கர் 0.37, தற்போதைய உட்பிரிவு படி பட்டா எண். 330, சர்வே எண். 3/9, இதில் உள்ள 1649 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம், அதனுடன் கூடிய கதவு எண். 1/287, புதிய கதவு எண். 7/2 ல் உள்ள RCC, ACC கட்டிடம் மற்றும் அனைத்து இதர வழி வசதி உரிமைகள் சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். **இதன் எல்லைகளாவன பின்வருமாறு** – வடக்கு – கிழமேல் தெரு, தெற்கு – வீரம்மாள் இல்ல சொத்து, கிழக்கு – வீரம்மாள் இல்ல சொத்து, மேற்கு – ஆறுமுகம் இல்ல சொத்து. அளவீடுகளாவன – கிழமேல் இருபுறமும் 34 அடி, தென்வடல் கிழக்கு புறம் 50 அடி, தென்வடல் மேற்கு புறம் 47 அடி. என மொத்தம் 1649 சதுர அடி.

| அடிப்படை விலை | டேவணித் தொகை | விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை | ஏல தேதி & நேரம் | டேவணித்தொகை செலுத்த கடைசி தேதி & நேரம் |
|---|---|---|---|---|
| ரூ. 88,25,300/– | ரூ. 8,82,530/– | ரூ.1,00,000/– | 08.12.2026 காலை 10.30 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை | 07.12.2026 மாலை 03.00 மணி வரை |

**விலைப்புள்ளி மற்றும் ஏல விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள்**

1). ஏல விற்பனையானது வலைதளம் https://www.bankeauctions.com மூலம் "Online e–auction" வாயிலாக இதன் மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதிகளில் எண்ணிலடங்கா முறை 5 நிமிட நேர நீட்டிப்புடன் நடத்தப்படும். 2). விருப்பமுள்ள ஏலதாரர்கள் தங்களது டேவணித்தொகையை வலைதளம் https://www.bankeauctions.com மூலம் பயனாளி அடையாளம் மற்றும் கடவுச்சொல் வாயிலாக சமர்ப்பிக்க வேண்டும். (பயனாளி அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை தங்களது பெயரை வலைதளம் https://www.bankeauctions.com ல் பதிவு செய்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்). அடிப்படை விலையின் 10% தொகையை டேவணித்தொகையாக பே ஆர்டர் மூலம் / "HDB Financial Services Limited" என்ற பெயருக்கு எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலை மூலம் செலுத்த வேண்டும். ஏலதாரரால் வலைதளத்தில் தம்மை பதிவு (ஒரு முறை) செய்த பிறகு, விருப்பமுள்ள ஏலதாரர் / வாங்குபவர் பின்வரும் ஆவணங்களில் நகல்களை, விலைப்புள்ளி ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரத்துக்கு முன்பு வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். அவையாவன – I). NEFT/ RTGS சலான் அல்லது கேட்பு வரைவோலை நகல் II). நிரந்தர கணக்கு அட்டை III). அடையாள சான்று / முகவரி சான்று (KYC) அதாவது வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / கடவுச்சீட்டு போன்றவை இவையன்றி வரும் விலைப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும். முறையாக நிரப்பப்பட்ட, கையொப்பமிட்ட பிற்சேர்க்கை II & III ஆகியவற்றின் ஒளிவருடப்பட்டு பதிவேற்றம் செய்யப்படும் நகல்களை வலைதளம் https://www.bankeauctions.com லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். உள்நுழை அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை உருவாக்குவதிலோ, தகவல்களை பதிவேற்றம் செய்வதிலோ விலைப்புள்ளி ஆவணங்களை சமர்ப்பிப்பதிலோ, பயிற்சி / ஆன்லைன் உள்ளூர் விலைகோரலுக்கான செய்முறை விளக்கம் பெறுவதிலோ உதவி தேவைப்படும் விருப்பமுள்ள ஏலதாரர்கள், M/s. C1 India Pvt Ltd, ப்ளாட் எண் : 68, 3 வது தளம், செக் 44, குர்காவ்ன், ஹரியானா – 122003 மின்னஞ்சல் முகவரி : support@bankeauctions.com, தொடர்பு நபர் பெயர் / மின்னஞ்சல் முகவரி மற்றும் தொடர்பு எண் : திரு தரணி கிருஷ்ணா, தொலைபேசி எண். 9948182222 யை தொடர்பு கொள்ளலாம். 3). ஏலத்திற்கு விருப்பமுள்ள ஏலதாரர்கள் நேரில் ஆஜராகி தனிப்பட்ட முறையில் பங்கேற்று, எழுத்து பூர்வமாக அவர் தனக்காக விலைகோருகிறார் என எழுத்து பூர்வமாக அறிவிக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட நபர் எவரும் அனுமதிக்கப்படுவதில்லை. விருப்பமுள்ள ஏலதாரர்கள், மேலாளர், ஏலம் நடைபெறும் இடம் – HDB ஃபைனான்ஸியல் சர்வீசஸ் லிமிடெட், எண். 3, திவ்யா ட்ரேட் சென்டர், இரண்டாவது தளம், பிருந்தாவன் சாலை, சேலம் – 636 016 அவர்களிடமிருந்து விலைப்புள்ளி படிவங்களை பெற்றுக்கொள்ளலாம். 4). விருப்பமுள்ள ஏலதாரர்கள், தங்களது விலைப்புள்ளிகளை உரிய விலைப்புள்ளி படிவத்தில் நிரப்பி, முத்திரையிட்ட உறையிலிட்டு, அதிகாரப்பூர்வ அலுவலர், HDB ஃபைனான்ஸியல் சர்வீசஸ் லிமிடெட் – க்கு முத்திரையிட்டு, அடிப்படை விலையின் 10% யை "HDB Financial Service Limited" என்ற பெயருக்கு எடுக்கப்பட்ட பே ஆர்டர் / கேட்பு வரைவோலையாக எடுக்கப்பட்ட டேவணித்தொகையுடன், இத்துடன் அறிவிக்கப்பட்ட விலைப்புள்ளி மற்றும் ஏல விற்பனை தேதியான 07.12.2026 அன்று மாலை 03.00 மணி அல்லது அதற்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும். 5). சொத்து மற்றும் இதர விபரங்களை ஆய்வு செய்ய, வாங்க விருப்பமுள்ள நபர்கள், M/s. HDB ஃபைனான்ஸியல் சர்வீசஸ் லிமிடெட், எண். 3, திவ்யா ட்ரேட் சென்டர், இரண்டாவது தளம், பிருந்தாவன் சாலை, சேலம் – 636 016 அதிகாரப்பூர்வ அலுவலர் திரு. A ரஞ்சித் – 99525 35434 ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். சொத்து/க்கள் "இருக்கின்ற இடத்தில்" மற்றும் "இருக்கின்ற நிலையில்" என்ற அடிப்படையில் விற்கப்படுகின்றன. 6). முத்திரையிட்ட விலைப்புள்ளிகள், விருப்பமுள்ள ஏலதாரர்கள் முன்னிலையில், இத்துடன் அறிவிக்கப்பட்ட விலைப்புள்ளி மற்றும் ஏல விற்பனை தேதியான 08.12.2026 அன்று காலை 10.30 மணிக்கு திறக்கப்படும். பொதுவாக விற்பனையானது மூடிய விலைப்புள்ளிகளின் வாயிலாக நடைபெறும் போதிலும், அதிகாரப்பூர்வ அலுவலர், தனது சொந்த அதிகாரத்தின் பேரில், மூடிய விலைப்புள்ளிகளாக வரப்பெற்ற விலைப்புள்ளியை விட அதிகமாக விலை கோர வினையும், விருப்பமுள்ள ஏலதாரர்கள் மத்தியில் திறந்த வெளி ஏலம் நடத்தலாம்., அவ்வாறு நடைபெறும் போது, விற்பனை அதிகபட்ச விலைகோரும் நபருக்கே உறுதிப்படுத்தப்படும். எனினும், விற்பனை HDB ஃபைனான்ஸியல் சர்வீசஸ் லிமிடெட் – ன் உறுதிப்படுத்தலுக்கு கட்டுப்பட்டதாகும். 7). வெற்றி பெற்ற ஏலதாரர், விற்பனை உறுதிப்படுத்தப்பட்டதன் பேரில், விற்பனை தொகையின் 25% யை (டேவணித்தொகை உட்பட) உடனடியாக அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு மிகுறி தாமதமாகாமல் செலுத்த வேண்டும்., மீதி 75% தொகையை விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும்., தவறும் பட்சத்தில், தொடக்கத்தில் செலுத்திய 25% தொகை அபராதமாக கருதி கழிக்கப்படும். எக்காரணத்தைக்கொண்டும் அத்தொகை திருப்பித்தரப்பட மாட்டாது. 8). வெற்றி பெற்ற ஏலதாரர், மேற்சொன்னவாறு, மொத்த ஏலத்தொகையில் 25% செலுத்த தவறும் பட்சத்தில், அடுத்த வெற்றி பெற்ற ஏலதாரர் பரிசீலிக்கப்படுவதோடு, அவர் விற்பனையை முடிக்க உரிமையுடையவராவார். 9). விற்பனைச்சான்று, அதிகாரப்பூர்வ அலுவலரால், வாங்குவதில் வெற்றி பெற்றவர் பெயரில் மட்டுமே, விற்பனைத்தொகையை, இதில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள், முழுமையாக பெறப்பட்ட பிறகே வழங்கப்படும். 10). வாங்குவதில் வெற்றி பெற்றவரே பரிமாற்றத்துக்கு சட்டப்படி பொருந்தத்தக்கவாறு, செலுத்தப்பட வேண்டிய முத்திரை தீர்வை, பதிவு கட்டணம் போன்ற கட்டணங்கள் / செலவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். 11). சட்ட ரீதியில் செலுத்த வேண்டிய (சட்டப்படியிலான வீட்டு வரி, மின் கட்டணங்கள் மற்றும் இதர நிலுவைகள்) TDS, GST போன்ற வற்றை ஏதேனும் அரசுக்கோ அரசு நிறுவனத்துக்கோ உள்ளாட்சி அமைப்புக்களுக்கோ செலுத்த வேண்டியிருப்பின் அவற்றை வெற்றி பெற்ற ஏலதாரர் செலுத்த வேண்டும். 12). அதிகாரப்பூர்வ அலுவலர், எக்காரணமும் கூறாமல், விலைப்புள்ளி அல்லது ஏலப்புள்ளிகளில் ஏதேனும் அல்லது அனைத்தையும் ஏற்றுக்கொள்ள அல்லது ரத்து செய்யவும், ஏலத்தை ஒத்தி வைக்க / தள்ளி வைக்க / ரத்து செய்யவும், எக்காரணமும் கூறாமல், விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றவும், எந்த முன் அறிவிப்புமின்றி, விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றவும் உண்டான அதிகாரத்தை தன்னகத்தே வைத்துள்ளவராவார்.

தேதி : 04.11.2026 , இடம் : சேலம்
ஒப்பம்/–அதிகாரப்பூர்வ அலுவலர், HDB ஃபைனான்ஸியல் சர்வீசஸ் லிமிடெட்.



**பொது அறிவிப்பு**

தமிழ்நாடு மாநிலம், சேலம் மாவட்டம், சர்க்கார் கொல்லப்பட்டி, வட்டமுத்தாம்பட்டி, வயக்காடு, ஏரிக்கரை, கதவு எண். 4/134, என்ற முகவரியில் வசிக்கும் திரு. பெருமாள் அவர்களின் மகன் **திரு. சாந்தகுமார்** ஆகிய எமது கட்சிக்காரர் வழங்கியுள்ள தகவலின் பேரில் நான் வழங்கும் பொது அறிவிப்பு யாதெனில்:–

மேற்படி எமது கட்சிக்காரருக்கு பாத்தியப்பட்ட இனாம்வேடுகத்தாம்பட்டி கிராமம், ச.நெ. 1/2பி, மனை எண். 58, 2400 சதுரடிகள் கொண்ட நிலத்திற்கு சம்பந்தபட்ட தாய் ஆவணங்களாக பதிவு செய்யப்பட்ட 1. கிரய பத்திரம் எண் 2278/2008–ம் எண்ணில் கடந்த 06.10.2008–ம் நாள் 3 நெ சேலம் மேற்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட மேற்படி அசல் ஆவணமும், 2. பிழைத்திருத்தல் பத்திரம் எண் 142/2022–ம் எண்ணில் கடந்த 13.01.2022 ம் நாள் 3 நெ சேலம் மேற்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட மேற்படி அசல் ஆவணமும், 3. கிரய பத்திரம் எண் 2509/2023–ம் எண்ணில் கடந்த 29.08.2023–ம் நாள் 3 நெ சேலம் மேற்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட மேற்படி அசல் ஆவணமும் தொலைந்துவிட்ட காரணத்தினால் எமது கட்சிக்காரர் தமிழ்நாடு காவல் துறை இணைய புகார் பிரிவில் விவர எண். OLC6002600074716 வழியாக கடந்த 03.11.2026–ம் தேதி புகார் அளித்து அதற்கான ஒப்புகையும் பெற்றுள்ளார். எனவே மேற்படி எமது கட்சிக்காரர் குறிப்பிட்டுள்ள மேற்படி அசல் ஆவணங்களை யாரேனும், எங்கேனும் கண்டெடுத்தால் உடனே எமது கட்சிக்காரருக்கோ அல்லது எனக்கோ இந்த அறிவிப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும். தவறினால் மேற்படி தொலைந்து விட்ட ஆவணங்களின் சான்றிட்ட நகலை எதிர்வரும் சொத்து பரிமாற்றங்கள் உள்ளிட்ட விற்பனை, தானம், அடைமானம் ஆகியவற்றிக்கு அசலாக கருதி பயன்படுத்த உள்ளார் என்பதை அறியவும், அதன்பின் வரும் எந்த கோருரிமையும் ஏற்கப்படமாட்டாது என்பதையும் அறியவும்.

க.வேலாயுதம்.,எம்.எஸ்.சி.எம்.எல்
வழக்கறிஞர் & சான்றுறுதி அலுவலர்
சேலம் – 636 007
அலைபேசி எண் 94430 93345

தேதி : 05.11.2026
இடம் : சேலம்



**பொது அறிவிப்பு**

தமிழ்நாடு மாநிலம், சேலம் மாவட்டம், ஸ்ரீ கற்பகராஜன் நிலையம், குறிஞ்சி நகர், 1வது தெரு, மகேந்திரபுரி, கன்னங்குறிச்சி அஞ்சல், கதவு எண். 299/1 என்ற முகவரியில் வசிக்கும் திரு. சிவசங்கரபிள்ளை அவர்களின் மகன் **திரு. ராஜன்** ஆகிய எமது கட்சிகாரர் வழங்கியுள்ள தகவலின் பேரில் நான் வழங்கும் பொது அறிவிப்பு யாதெனில்:–

மேற்படி எமது கட்சிகாரருக்கு பாத்தியப்பட்ட கொமாரசாமிப்பட்டி கிராமம், வார்டு பி, டி. எஸ்.நெ. 46, 47, 1610 சதுரடிகள், கொண்ட நிலத்திற்கு சம்பந்தபட்ட தாய் ஆவணமாக பதிவு செய்யப்பட்ட பிழைத்திருத்தல் பத்திரம் எண். 1628/1990–ம் எண்ணில் கடந்த 19.10.1990–ம் நாள் சேலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட மேற்படி அசல் ஆவணம் தொலைந்துவிட்ட காரணத்தினால் எமது கட்சிக்காரர் தமிழ்நாடு காவல் துறை இணைய புகார் பிரிவில் விவர எண். OLC6002600074603 வழியாக கடந்த 03.11.2026– ம் தேதி புகார் அளித்து அதற்கான ஒப்புகையும் பெற்றுள்ளார் எனவே மேற்படி எமது கட்சிக்காரர் குறிப்பிட்டுள்ள மேற்படி அசல் ஆவணத்தை யாரேனும் எங்கேனும் கண்டெடுத்தால் உடனே எமது கட்சிக்காரருக்கோ அல்லது எனக்கோ இந்த அறிவிப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும். தவறினால் மேற்படி தொலைந்து விட்ட ஆவணத்தின் சான்றிட்ட நகலை எதிர்வரும் சொத்து பரிமாற்றங்கள் உள்ளிட்ட விற்பனை, தானம், அடைமானம் ஆகியவற்றிக்கு அசலாக கருதி பயன்படுத்த உள்ளார் என்பதை அறியவும். அதன்பின் வரும் எந்த கோருரிமையும் ஏற்கப்படமாட்டாது என்பதையும் அறியவும்.

க.வேலாயுதம்.,எம்.எஸ்.சி.எம்.எல்
வழக்கறிஞர் & சான்றுறுதி அலுவலர்
சேலம் – 636 007
அலைபேசி எண் 94430 93345

தேதி : 05.11.2026
இடம் : சேலம்



Can Fin Homes Ltd (Sponsor: CANARA BANK) HOME LOANS • DEPOSITS — Translating Dreams into Reality

சேலம் கிளை
நெ.1, ஜான்சன்பேட்டை ரோடு, அஸ்தம்பட்டி, சேலம் - 636 007.
Ph : 0427-2420017. Cell : 76250 79158
E-mail : E-Mail: salem@canfinhomes.com
CIN:L85110KA1987PLC008699

**கையகப்படுத்தியதற்கான அறிவிப்பு**
(விதி-8(1)) (அசையா சொத்துக்களுக்கானது)

கீழ் கையொப்பமிட்டவர் கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியாக [illegible] 2002 [illegible] 01.09.2026 [illegible] 1) [illegible] (கடன்தாரர்), க.எண்.53, [illegible] சண்முகாநகர், தாதகாப்பட்டி, சேலம், தமிழ்நாடு - 636006 2) [illegible] (இணை-கடன்தாரர்), க.எண்.53, [illegible] சண்முகாநகர், தாதகாப்பட்டி, சேலம், தமிழ்நாடு - 636006, ஜாமீன்தாரர்கள் : 3) [illegible], க.எண்.53, [illegible] சண்முகாநகர், தாதகாப்பட்டி, சேலம், தமிழ்நாடு - 636006 4) [illegible], க.எண்.63, [illegible] சண்முகாநகர், தாதகாப்பட்டி, சேலம், தமிழ்நாடு - 636006. 5) [illegible], 4/219, [illegible] நாமக்கல் - 637503. 6) [illegible], 771, [illegible] சேலம் - 636005 ஆகியோருக்கு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள கடன் பாக்கி தொகையான ரூ.30,33,052/- (ரூபாய் முப்பது இலட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து ஐம்பத்து இரண்டு மட்டும்) மற்றும் அதனுடன் ஒப்பந்தத்தின் படி கடன் வசூலாகும் தேதிவரையிலான வட்டியுடனான தொகையை மேற்கூறிய அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பி செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர் தொகையை திருப்பி செலுத்தத் தவறியுள்ளார், இதன் மூலம் கடன்தாரர் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பானது கீழ் கையொப்பமிட்டவர் மேற்கூறிய விதிகளின் விதி 8 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இதன்கீழ் விவரிக்கப்பட்ட சொத்தினை 03-11-2026 நாளில் சுவாதீனம் மேற்கொண்டுள்ளார்.

கடனீட்டு சொத்துக்களை மீட்க உள்ள கால அவகாசம் தொடர்பாக மேற்குறிப்பிட்ட சட்டம் பிரிவு 13 உட்பிரிவு (8)-ன் கீழ் கடன்தாரரின் கவனம் வரவேற்கப்படுகிறது.

கடன்தாரருக்கு குறிப்பிட்டும் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது சொத்துடன் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டாம் மேலும் சொத்துடனான அனைத்து நடவடிக்கையும் கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்டுக்கு ரூ.30,33,052/- (ரூபாய் முப்பது இலட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து ஐம்பத்து இரண்டு மட்டும்) மற்றும் அதற்குரிய வட்டியுடன் செலுத்துவதற்குட்பட்டது.

**அசையா சொத்து விவரம்**

சேலம் கிழக்கு பதிவு மாவட்டம், தாதகாப்பட்டி துணைப் பதிவு மாவட்டம், சேலம் டவுன் [illegible] வார்டு, பிட்டா சர்வே எண்.85/1, பழைய T.S. எண்.409, க.எண்.35/59, 35/1, தற்போதைய [illegible] : வார்டு H, பிளாக் 16, T.S. எண்.121, 159 [illegible] : வார்டு H, பிளாக் 16, T.S. எண்.141/2. எல்லைகள் : கிழக்கே [illegible] மேற்கே [illegible] வடக்கே [illegible] தெற்கே [illegible]

இடம் : சேலம்
தேதி : 03-11-2026
ஒப்பம், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
கேன் ஃபின் ஹோம்ஸ் லிட்.


# தீக்காய சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் 30 படுக்கைகளுடன் சிறப்பு வார்டு ஏற்பாடு



சேலம் அரசு மருத்துவமனையில் 30 படுக்கைகளுடன் தீக்காய சிகிச்சைக்காக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு வார்டு.

**சேலம், நவ. 4:** தீபாவளி பண்டிகையையொட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, சேலம் அரசு மருத்துவமனையில் 30 படுக்கைகளுடன் தீக்காய சிகிச்சைக்காக சிறப்பு வார்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தமிழகம் முழுவதும் அரசு மருத்துவமனைகளில் தீக்காயங்களுக்கு உடனடி சிகிச்சை அளிக்கும் வகையில், சிறப்பு வார்டுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதன்படி, சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பட்டாசு காயங்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில், தீக்காய சிகிச்சை பிரிவில் 30 படுக்கைகள் கொண்ட சிறப்பு வார்டு அமைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மருத்துவர்கள் கூறுகையில், தீபாவளி பண்டிகையின்போது எதிர்பாராத விதமாக தீக்காயம் ஏற்பட்டால் சிறப்பு கவனம் செலுத்தி சிகிச்சை அளிக்க ஏதுவாக, சேலம் அரசு மருத்துவமனையில் தீக்காய சிகிச்சைக்காக சிறப்பு வார்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவுக்கென தனியாக பணிபுரிய பொது மருத்துவப் பிரிவு மருத்துவர்கள், குழந்தைகள் நல மருத்துவர்கள், கண் மருத்துவர்கள், பிளாஸ்டிக் சர்ஜரி நிபுணர்கள் என பல்வேறு துறைகளைச் சேர்ந்த மருத்துவர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு 24 மணிநேரமும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பிற மருத்துவப் பணியாளர்கள் தயாராக இருப்பர்.

உடலில் ஏற்படும் தீக்காயம், வெடியால் ஏற்படும் கண் பாதிப்பு, வெடிமருந்து புகையால் ஏற்படும் ஒவ்வாமை என பல்வேறு பாதிப்புகளுக்கு இந்த சிறப்பு வார்டில் சிகிச்சை அளிக்கப்படும். இதற்காக வெண்டிலேட்டர் உள்ளிட்ட கருவிகள் சிறப்பு வார்டிலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அனைத்து விதமான மருந்துகளும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. மேலும், அறுவை சிகிச்சை அரங்குகளும் தயார்நிலையில் உள்ளன என்றனர்.

# சேலம் லஷ்மி குழுமத்தின் தீபாவளி இனிப்பு திருவிழா தொடக்கம்



சேலம் பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள லஷ்மி ஹோட்டலில் வாடிக்கையாளருக்கு இனிப்பு வழங்கி முதல் விற்பனையை தொடங்கிவைத்த இயக்குநர் முத்துராஜா.

**சேலம், நவ. 4:** சேலம் லஷ்மி குழுமத்தின் தீபாவளி இனிப்பு திருவிழா புதன்கிழமை தொடங்கியது.

வரும் 8-ஆம் தேதிவரை நடைபெற உள்ள இந்த இனிப்பு திருவிழாவையொட்டி, சேலம் பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள லஷ்மி ஹோட்டலில் தீபாவளி சிறப்பு முதல் விற்பனையை இயக்குநர் முத்துராஜா தொடங்கிவைத்து கூறியது:

8 வகை லட்டுகள், 22 வகையான மைசூர் பாகுகள், 14 வகையான ஸ்பெஷல் மில்க் டீலக்ஸ் பர்பிகள், 33 வகையான மில்க் பர்பிகள், கார வகைகளில் நெல்லை மிக்ஸர், விருதுநகர் மிக்ஸர், ஆற்காடு மிக்ஸர், நவதானிய மிக்ஸர், லஷ்மி ஸ்பெஷல் மிக்ஸர் என 30-க்கும் மேற்பட்ட காரவகைகளை விற்பனைக்கு வைத்துள்ளோம்.

தீபாவளி அறிமுகமாக அரேபியன் பக்லவா கிப்ட் பாக்ஸ் - ரூ. 400, ட்ரை நட்ஸ் காம்போ பாக்ஸ் - ரூ. 180. பாதாம் சோன் பப்டி, டிரை புருட் லட்டு என பல்வேறு வகைகளை அறிமுகப்படுத்தி உள்ளோம்.

தீபாவளி கிப்ட் பாக்சாக சாதா ஸ்வீட் பாக்ஸ் (400 கிராம்) - ரூ.190, 800 கிராம் - ரூ. 380, ஸ்பெஷல் ஸ்வீட் பாக்ஸ் (400 கிராம்) - ரூ. 230, 800 கிராம் - ரூ. 460, விஐபி ஸ்வீட் பாக்ஸ் (400 கிராம்) - ரூ.270, 800 கிராம் - ரூ.540-க்கு கிடைக்கும். ஸ்வீட் வகைகள் ரூ. 300 முதல் ரூ.1,300 வரையும், காரவகைகள் ரூ. 320 முதல் ரூ. 480 வரையும் உள்ளன.

நடப்பாண்டு புதிய அறிமுகமாக காம்போ ஆஃபர்கள் பிக்பக்கெட் ரூ. 490-க்கும், ஸ்மால் பக்கெட் ரூ. 400-க்கும், பக்லாவா கிப்ட் பாக்ஸ் - ரூ. 400-க்கும், காஜி லட்டு காம்போ பாக்ஸ் ரூ. 180-க்கும் கிடைக்கும் என்றார். விழாவில், லஷ்மி குழுமத்தின் நிர்வாக இயக்குநர்கள் பிரபு, வெங்கட்ராகவன், ஸ்ரீநாத்குமார், மேலாளர் சங்கர் ஆகியோர் பங்கேற்றனர்.